**OS.No.39/2017**

**PW 1–செல்வி**

**க/பெ.குமரேசன்**

**நாள். 12.06.2025.**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இரண்டாம் பிரதிவாதி எனக்கு சித்தி முறை வேண்டும். மூன்றாம் பிரதிவாதி லிங்கதுரை எனக்கு சித்தப்பா. 21.2.2017 ரேணுகாதேவி அதாவது இரண்டாம் பிரதிவாதி என் கணவர் மீது வீட்டை காலி செய்து தர வேண்டும் என்று புகார் கொடுத்து இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் 3ம்பிரதிவாதி மீது புகார் கொடுத்தேன் என்றும் அது குற்ற எண் 138/2018 வேலம்பாளையம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றும் சொன்னால் சரிதான். அந்த வழக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2. அசல் வழக்கு எண் 478/2011 வழக்கில் இந்த இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளை தரப்பினராக காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல அதே வழக்கில் மேல்முறையீடு வழக்கு எண் 78/2017 லும் பிரதிவாதிகள் தரப்பினார்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல .1998 ஆம் வருடம் நான் ஒரு கிரயம் வாங்கி இருந்தேன் என்று சொன்னால் சரிதான் அதற்கு பின்னிட்டு 29.4.2010 அன்று தசரதன் என்ற நபருக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தேன் என்று சொன்னாலும் சரிதான் பிரதிவாதிகள் தான் கூட்டி சென்று தசரதன் பெயரில் பவர் எழுத வேண்டும் என்று சொன்னார்கள் அதனால் எழுதி கொடுத்தேன் .

3. 7.7.2011 தேதி அன்று தசரதன் இரண்டாம் பிரதிவாதி ரேணுகா தேவிக்கு கிரயம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது .இந்த

விவரம் தெரிந்த பின்பு தான் வழக்கு தாக்கல் செய்தோம் .இந்த அசல் வழக்கு 2017 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. 2011ல் கிரையம் செய்த பின்பு ஆறு வருடங்கள் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் ஆமாம். தசரதனுக்கு எழுதிக் கொடுத்த பவர் பத்திரத்தை இன்று வரை ரத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்திற்கு இன்று வரை இரண்டாவது பிரதிவாதி பெயரில்தான் வருவாய் துறை ஆவணங்கள் இருந்து வருகின்றது என்று சொன்னால் சரி. இரண்டாவது பிரதிவாதி கிரயத்தின்போது சரியான பிரதி பிரயோஜனம் கொடுத்துதான் கிரயம் செய்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல .அப்போதே சொத்தின் சுவாதீனமும் இரண்டாவது பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல .

5. 2011ல் கிரையம் செய்த பின்பு சுவாதீனமும் பெற்ற பிறகு இரண்டாவது பிரதிவாதி என்னுடனும் என் கணவருடனும் வாய்மொழியாக ஒரு வாடகை ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல .அந்த வாய்மொழி ஒப்பந்தத்தின்படி மாத வாடகை ரூபாய் ஆயிரமும் அட்வான்ஸ் தொகை ரூபாய் 10,000 பேசப்பட்டு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழியாக ஒவ்வொரு வருடமும் அந்த ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொள்வதாகவும் சொல்லி இருந்தார்கள் என்றால் சரியல்ல .

6. இரண்டாவது பிரதிவாதி எனக்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் வழியாகத்தான் சொத்தில் இருக்க அனுமதி கொடுத்திருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு தான் 2016 ஆம் ஆண்டு எங்களுக்குள் வாடகை சம்பந்தமான பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதற்காகத்தான் நாங்கள்

இரண்டாவது பிரதிவாதி மீது புகார் கொடுத்திருந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல .

7. தற்போது வரை வாடகை எதுவும் கொடுக்காமல் வாய்மொழி ஒப்பந்தத்தை மீறி பத்தாண்டுகளாக நாங்கள் சொத்தை உரிமை ஏதும் இல்லாமல் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல .

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

Digitally signed by V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.